பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 120
இதழ்: 23

09—12—1994

விலை ரூபா 5-00

**எதிர்பாருங்கள்**

காவலன் சிறப்பிதழ்கள்
23-12-1994
*கிறிஸ்மஸ் விழா*
13-01-1995
பாப்பரசர் வருகையும்
யோசேவ்வாஸ்
முத்திப்பேறு
பட்டமளிப்பும்

இலங்கை வானொலியில்
தமிழ் ஒலிபரப்பில்
டிசம்பர் 18 - ஞாயிறு
மாலை 9-30 மணிக்கு
பாப்பரசர் வருகையையொட்டி
தமிழீழ மறைமாவட்டங்களின்
(யாழ்ப்பாணம்-திரு. மட்டக்களப்பு-மன்னார்)
மூன்று ஆயர்களுடனான
உரையாடல்
நெறிப்படுத்துபவர்: திரு.C.R. மரியரெட்ணம்

* *கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்*

# தமிழ்ச் சகோதரர்களை துன்ப வேளை கைவிட்டது தவறு

● அருள்தந்தை டட்லி பெரேரா O. M. I.

**"பல்லாண்டு காலமாக தமிழ்மக்களை தமது சகோதரங்களாக மதித்து அன்புறவுடனும், ஒருமைப்பாட்டுடனும் வாழ்ந்து வந்த பெரும்பான்மையினராகிய சிங்களமக்கள், தமிழ்மக்களுடைய துன்பவேளையில், விடுதலைப்போராட்ட வேளையில் அவர்களை கைவிட்டு தனிமையில் தவிக்கவிட்டு பெரும் தவறிழைத்துவிட்டார்கள்." பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் யாழ். மறைவட்ட குருக்களுக்கான ஞானொடுக்கத்தில் அருளுரை ஆற்றிய அருள்தந்தை டட்லி பெரேரா o. m. i அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

ஜெத்சமெனித் தோட்டத்தில் இயேசு அனுபவித்த துன்ப வேதனைகளைப் பற்றி தியானம் வழங்குகையில், இயேசுவோடு பல காலம் இணைபிரியாது வாழ்ந்த சீடர்கள் அவருடைய வேதனையில் அவருக்கு ஆறுதல் அளிக்க மறுத்து ஒதுங்கியிருந்த நிகழ்வைப்பற்றி விளக்கும்போதே அவர் மேற்கூறியவாறு குறிப்பிட்டார்.

இருப்பினும், இயேசுவின் சிலுவைப்பாதையில் அவருக்கு ஆறுதலாக இருந்த ஒரு சிலரைப்போல் இன்றும் ஒரு சில சிங்கள சகோதரங்கள் தமிழ்மக்களின் இன்னல்களை அனுதாபத்தோடு நோக்குவதையும், தம்மால் இயன்ற வரை உதவிக்கரம் நீட்ட ஆயத்தமாய் இருப்பதையும் நாம் மறுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிறிஸ்துவின் உண்மைச் சீடராய் வாழ்வது எப்படி என்ற கருப்பொருளில் விவிலிய ஆதாரங்களுடன் பல அரிய ஆன்மீக கருத்துக்களை வழங்கி

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

யாழ் பேராலயத்தில்—டிசம்பர் 15ஆம் நாள்

## குருத்துவத் திருநிலைப்படுத்தல்



அருள்சகோதரன் யோ. பிரான்சிஸ் அவர்கள் எதிர்வரும் மார்கழித் திங்கள் பதினைந்தாம் திகதி காலை 9. 00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில், யாழ். ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

1961ஆம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் திகதி பிறந்த இவர், நீர்வேலி புனித பரலோக அன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. யோசப் இராஜேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வராவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை நீர்வேலி றோ. க. பாடசாலை, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி என்னும் கல்விக்கூடங்களிலும், உயர்கல்வியைக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்றார். 1984ஆம் ஆண்டு யாழ். புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்து கொண்ட இவர், 1985 முதல் 1993 வரையி

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## யாழ் மறைமாவட்ட ஆணைக்குழுக்களும் அவற்றின் தலைவர்களும்

யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் பரிந்துரைகளை மேற்கொண்டு, யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது தலத் திருச்சபையின் பணியை இலகுபடுத்தும் பொருட்டு பதினான்கு (14) ஆணைக்குழுக்களை உருவாக்கி அவற்றின் தலைவர்களை நியமித்துள்ளார். அதன் விபரங்கள் பின்வருமாறு:

| | | அருள்திரு: |
|---|---|---|
| 1. | வேதாகமம் — மறைக்கல்வி | R. H. சகாயநாயகம் |
| 2. | திருவழிபாடு | J. நிக்கலாஸ் |
| 3. | நற்செய்தி அறிவிப்பு | (அ. ம. தி.) |
| 4. | குருக்கள்-துறவியர் | M.றெஜீ இராஜேஸ்வரன் |
| 5. | பொதுநிலை விசுவாசிகள் | S. J. இம்மானுவேல் |
| 6. | இளைஞர்-யுவதிகள் | P. J. ஜெபரட்ணம் |
| 7. | குடும்பம் | S. J. இராசநாயகம் |
| 8. | நோயாளர் | P. இருதயதாஸ் |
| 9. | கல்வி | A. T. இராஜநாயகம் |
| 10. | நீதி-சமாதானம் | C. G. ஜெயக்குமார் |
| 11. | மனித முன்னேற்றம் | S. H. ஜெபநேசன் |
| 12. | சமூகத் தொடர்பு | R. J. A. மத்தாயஸ் |
| 13. | கலை - பண்பாடு | N. M. சவிரிமுத்து |
| 14. | கிறிஸ்தவ ஒன்றிப்பு | B. யஸ்ரின் |
| | பிறமத உரையாடல் | ஞானப்பிரகாசம் |

மறைக் கோட்ட குரு முதல்வர்கள் ஒவ்வொரு ஆணைக் குழுவுக்கும் உறுப்பினராக தத்தமது மறைக் கோட்டத்திலிருந்து குருக்கள் (1) துறவியர் (1) பொதுநிலை விசுவாசிகள் (2) ஆகியோரைத் தெரிவு செய்து யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் S. J. இம்மானுவேல் அடிகளாருக்கு 18ஆம் திகதிக்கு (18-12-94) முன்னர் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திருத்தந்தையின் இலங்கை விஜயம்

## திருத்தி அமைத்த நிகழ்ச்சிநிரல்

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் கொழும்பு விஜயத்துக்கான சகல விதமான ஏற்பாடுகளும் தற்பொழுது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஏற்பாடுகளைப் பார்வையிடவென திருத்தந்தையின் பிரதிநிதி அதிவண. பிதா டுச்சி வத்திக்கானிலிருந்து கொழும்பு வந்தார்.

பரிசுத்த பாப்பரசர் எதிர் வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததும் அவர் சம்பிரதாய பூர்வமாக இலங்கை மண்ணை முத்தமிடுவார்,

அவர் மலர் மாலை அணிவிக்கப்பட்டு, திறந்த மோட்டார் வண்டியில் பவனி

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து பாப்பரசருக்கு விசேட செய்தி

திருத்தந்தையின் இலங்கை விஜயத்தை வரவேற்கும் விசேட செய்தியொன்று ஜனாதிபதி சந்திரிகா விஜய குமாரணதுங்கவினால் பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மூலம் வத்திக்கானில் வைத்து பரிசுத்த பாப்பரசரிடம் அண்மையில் நேரில் கையளிக்கப்பட்டது.

திருத்தந்தையை கௌரவிக்கும் விதத்தில் ஜனவரிமாதம் 21ஆம் திகதியை பொதுவிடு

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## காலிமுகத்திடலில் துரித ஆயத்தங்கள்

திருத்தந்தையின் கொழும்பு விஜயத்திற்கான ஏற்பாடுகளில் சுமார் 18 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர். திருத்தந்தை பகிரங்க ஆராதனை நிறைவேற்றவுள்ள காலிமுகத்திடல் இதன் பொருட்டு தற்பொழுது துரிதகதியில் செப்பனிடப்பட்டு வருகின்றது. இந்தத்திடல் தற்பொழுது கடல் மட்டத்திலிருந்து காலி வீதி மட்டத்திற்கு உயர்த்தப்பட்டு வருகின்றது.

காலி முகத்திடலில் கூடவுள்ள இலட்சக்கணக்கான யாத்திரிகர்களின் வசதியின்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## மக்களுக்கு நிரந்தர பாதை வேண்டும்

❋ யாழ் ஆயர்

பரிசுத்த பாப்பரசரின் வருகைக்கென ஆயத்தங்கள் மேற்கொள்ளும் முகமாக கூட்டப்பட்ட இலங்கைக் கத்தோலிக்க ஆயர்பேரவையில் பங்குபற்றச் சென்ற யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, இக்கூட்டத்திலும் மற்றும் ஜனாதிபதி, அமைச்சர்கள் இராணுவப் பிரமுகர்கள் உடனான பலதரப்பட்ட சந்திப்புகளிலும், யாழ்குடா மக்களின் போக்குவரத்துக்கான தற்காலிக பாதையை அல்ல, மாறாக நிரந்தரமான பாதை ஒன்றைத் திறப்பதன் அவசியத்தை மீண்டும், மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஆனையிறவுப் பாதையை உடனடியாகத் திறப்பதில் உள்ள பல்வேறு சிக்கல்களையும் இவர்களுக்கு விளக்கிய ஆயர் அவர்கள், சிறிலங்கா ஜனாதிபதிக்கு எழுத்தில் கொடுத்த மகஜரில், பூநகரி ஊடாக மக்கள் பயணம் செய்வதற்கு இராணுவம் தற்போதைய தன்நிலையிலிருந்து நகர்ந்துசெல்ல வேண்டுமென்றும், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுடன், தரைமார்க்கமான பாதைகளைச் செப்பனிட கிளிநொச்சி அரசாங்க அதிபரினதும் UNHCR, ICRC ஆகியோரினதும் உதவியைநாட வேண்டுமென்றும்கேட்டுக்கொண்டார்.

## கிளி, முருகானந்தா வித்தியாலய ஒளிவிழா

கிளி. முருகானந்தா மகா வித்தியாலய ஒளிவிழா 12-11-94 சனிக்கிழமை அதிபர் திரு. ம. பத்மநாதன் தலைமையில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இப் பாடசாலை ஒரு இந்து மகாவித்தியாலயமாக இருந்தாலும், பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும் தாம் பொறுப்பேற்ற பொறுப்புக்களை இன் முகத்துடன் செய்துமுடித்தது பெரும் மகிழ்ச்சியூட்டியது.

வித்தியாலய கலை வர்த்தக

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## ஆராதனையும் விற்பனையும்

பரிசுத்த பாப்பரசரின் வருகை எவ்விதமான இடையூறுமின்றி நன்மையாக நடைபெறவேண்டுமென்று வேண்டி சகல ஆலயங்கள் தோறும் பிரார்த்தனைகள் நடைபெற்று

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## எம்கருத்து

# அமைதியின் அண்ணலே வருக!

கிறிஸ்துவின் வருகைக்கென நம்மை ஆயத்தம் செய்யும் காலம் இது. மெசியாவின் வருகைக்கென தங்களைத் தயார் செய்த இஸ்ராயேல் மக்களின் மனநிலையை மீண்டும் நமக்கு உணர்த்தி, இறைமகன் இயேசுவை நம் உள்ளத்திற்கும் வாழ்க்கைக்கும் மீட்பராக ஏற்றுகொள்ள அழைப்பு விடுக்கும் காலம் இது.

இஸ்ராயேல் மக்களுக்கும் இறைவனுக்கும் இடையே ஆழ்ந்த உறவு இருந்தது. இந்த உறவு உடன்படிக்கையினால் வலுப்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் பயனாக இஸ்ராயேல் மக்கள் அடிமைச் சேவை செய்ய அல்ல – அன்புப் பணி புரியவும், பய நடுக்கத்தோடு அல்ல – நம்பிக்கையோடு வாழவும், அடங்கி ஒடுங்கி சட்டத்தை ஏற்க அல்ல– முழுமனத்தோடு விரும்பி சட்டங்களின்படி ஒழுகவும் அழைக்கப்பட்டனர். கடவுளும் தம்மை ஒரு கொடுங்கோலனாகவோ, கொடூரமான தலைவனாகவோ இம் மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை. இறைவன் தம் படைப்பலத்தைக் காட்டி மக்களை அடிபணிய வைக்கவில்லை; கீழ்ப்படிய மறுப்பவர்களைத் தம் வல்லமையால் நசுக்கிவிடவில்லை.

இஸ்ராயேல் மக்கள் இறைவனை மறந்து பிற சிருட்டிகளை வழிபட முற்பட்டபோது, மெசியாவின் வருகையை நினைவூட்டி மக்களை வழிநடத்த இறைவாக்கினர் பலர் முயன்றனர்.

உலகில் தீமையைத் தகர்த்தெறிய, மக்களை அடிமைத்தனத்தினின்று மீட்க, நிலையான சமாதானத்தை நிலைநாட்ட, நீதி தழைக்கச் செய்ய இறைவன் ஒரு மீட்பரை, மெசியாவை அனுப்புவார். அன்பு, அமைதி, நீதி, நேர்மை விளங்க தங்களை வழிநடத்தவிருக்கும் தலைவரைப் பல்வேறு உருவகங்களால் இறைவாக்கினர் இசையாஸ் வருணிக்கிறார். "வியத்தகு ஆலோசனையாளர், வல்லமையுள்ள இறைவன், முடிவில்லாத் தந்தை, அமைதியின் மன்னன்" (இசை. 9:6) என்றெல்லாம் மீட்பரைக் காண்கிறார்.

அண்டைய நாட்டு மன்னர்களின் படையெடுப்பினால் நசுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்கு, 'இறைவனின் துணை உண்டு; அஞ்சாதே, மெசியா வரப் போகிறார்' என்ற நம்பிக்கையை உணர்த்தி நின்றார் இசையாஸ் இறைவாக்கினர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இசையாசின் குரல் ஒலித்தபோதிலும், அது இன்றும் நம்முடைய காதில் ஒலிக்கின்றது.

இறைவனை மறந்து வாழும் மக்கள் இன்று பெருகிக்கொண்டே போகின்றனர். கொலையும் கொள்ளையும், பொய்யும் புரளியும், ஊழலும் உறிஞ்சலும், போரும் புரட்சியும் பெருகிக்கொண்டே வருகின்றன. மக்களின் உள்ளத்தில் அச்சம், பீதி, மனக்கசப்பு, துன்பம் நிறைந்துள்ளதைப் பார்க்கின்றோம்.

இந்நிலையில் நாம் என்ன செய்வது?

கடவுளை மறந்துவிட்டு, அவரை ஒதுக்கிவிட்டு மனிதன் வாழமுடியாது; விடுதலை அடையமுடியாது. இசையாசின் கூற்றின்படி இறையரசை நம்பிக்கையுடன் எதிர்பார்த்து நமது வழியை நெறிப்படுத்த வேண்டும்.

இறையரசு உண்மை அரசு; நீதியின் அரசு; கள்ளம் கபடற்ற அரசு; பிறரின் நலன்களைப் பேணும் சிறப்பு மிக்க அரசு. அங்கே ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒரே தடாகத்தில் நீர் பருகும்; குழந்தை விரியன் பாம்புக் குட்டியுடன் விளையாடும்.

இவ்வரசு இலட்சிய உலகாகத் தோன்றலாம். கனவு எனவும் கருதலாம்! ஆனால் நம் உள்ளம் அப்படியான இலட்சியக் கனவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். கனவுகளை நனவாக்குதல் இறைவனின் அருளினால்தான்.

எனவே, இறைவனைச் சார்ந்திராத தன்மையினின்று, அவரின அரசை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத நிலையிலிருந்து, நமது ஆணவத்திலிருந்து, நாம் நீதிமான்கள் என்ற தப்பான எண்ணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு நம் உள்ளத்தில் இறையரசை அமைப்போம். அமைதியின் மன்னனை வருக, வருக என வரவேற்போம்!

# "மூன்றாம் சகாப்தம் அண்மித்து வருகின்றார்"

### ❋ திருத்தந்தையின் அப்போஸ்தலிக்க கடிதத்தின் சுருக்கம்

'மூன்றாம் சகாப்தம் அண்மித்து வருகின்றார்' என்ற தலைப்பிலான கிறிஸ்து பிறந்த தன் 2000 ஆம் ஆண்டிற்கான தயாரிப்புக்கென திருத்தந்தையின் அப்போஸ்தலிக்க மடல் வெளியிடப்பட்டது நம் எல்லோருக்கும் தெரியும்.

இந்த அப்போஸ்தலிக்க மடல் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. முதற் பகுதியில் இயேசு நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்ற பொருளில் பேசுகின்றார் மனுவுருவழி கடவுள். கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே இயேசு பாலமாகிறார் என்றும் இறைவனே மனிதனைத் தேடி வருகிறார் என்ற கருத்தையும் வலியுறுத்துகிறார்.

இரண்டாவது பகுதி ஜூபிலி ஆண்டு ரண்டாயிரம் என்பதைப் பற்றிப் பேசுகையில் இயேசுவின் பிறப்பு, காலம் நிறைவுற்றபோது நிகழ்கிறது என்றும், காலம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது, குறிப்பாகப் படைப்பு, மீட்பு இவைகள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் நடைபெறுகின்றன என்பதையும் காண்கிறோம். இதைத்தான் பாராட்டு விழாவில் இறைவன் காலத்தின் இறைவனாகக் காணப்படுகின்றார். மேலும் இந்த ஆண்டிலே சமுதாயத்தின் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் பரிசுத்த தந்தை வலியுறுத்துகின்றார்.

இந்த ஜூபிலி ஆண்டு மனித இனத்திற்கே ஒரு முக்கியமான ஜூபிலி ஆண்டாக, கிறிஸ்து பிறப்பைப் மையமாகக் கொண்ட கால கட்டமாக இருக்கிறது என்றும் வலியுறுத்துகின்றார்.

மூன்றாவது பகுதியிலே இரண்டாயிரமாம் ஆண்டின் ஜூபிலிக்கு நாம் நம்மையே தயாரிக்கவேண்டும் என்பதைக் குறிப்பிடுகையில் ஏற்கனவே சில விதங்களிலே நாம் தயாரித்திருக்கிறோம், 2ஆம் வத்திக்கான் சங்கம் ஒரு சமீபத்திய தயாரிப்பு என்றார். அதனைத் தொடர்ந்து பரிசுத்த தந்தையவர்களுடைய சுற்று மடல்கள், ஆயர் பேரவைகள், மற்றும் புனிதர்கள், மரியாள் ஆண்டு, குடும்ப ஆண்டு இவைகள் வழியாக நாம் தயாரித்து வருகின்றோம், அதுவும் குறிப்பாக பரிசுத்த தந்தையவர்கள் இந்த 2000 ஆம் ஜூபிலி ஆண்டு புதுதிருவருகைக்காலம் என்பதை ஒரு குறிப்பிட்ட விதத்திலே வலியுறுத்திப் பேசுகின்றார்.

அடுத்த உடனடித் தயாரிப்பும் தேவை என்பதை வெளிப்படுத்துகின்றார். இதனை நாம் இரண்டு நிலைகளிலே செய்யலாம் என்றும், முதல் நிலையிலே ஜூபிலி ஆண்டைப்பற்றிய மையக் கருத்துப்பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்றும், இரண்டாவது நிலையிலே கிறிஸ்துவின் மறைபொருள் மீட்பு என்ற பொருளில் சிந்திக்க வேண்டும் என்பதையும் கூறுகின்றார்.

கடைசிப் பகுதியிலே நாம் இந்த விழாவை எப்படி அணுக வேண்டும். எல்லா இடங்களிலும் ஒரே சமயத்திலே கொண்டாட வேண்டுமென்றும் 'கிறிஸ்து என்றும் மாறாதவர்' என்ற தலைப்பிலே நாம் பல இடங்களிலே ஆயர் சிறப்புப் பேரவைகள் நடத்தி இதற்கு ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவம் தரவேண்டுமென்றும், குறிப்பாக கம்யூனிச, மார்க்சிச கொள்கைகள் வீழ்ந்த நிலையிலே, ஐரோப்பிய மக்களுக்கு விடுதலைச் செய்தி உடனடியாகத் தேவை என்ற ஒரு கருத்தையும் இந்தச் சுற்று மடல் உள் மையமாகக் கொண்டுள்ளது.

## யார் இவர்?

வாழ்க்கையில் எது நேர்ந்தாலும்
அதன் மறுபகுதி — துன்பம்
நம்மைப் பிறக்க வைத்தபோது தாய் பட்டது — துன்பம்
தாய் இறந்து போனால் படப்போவது — துன்பம்
இரண்டிற்கும் இடையே படப்போவது — துன்பம்
பணம் இல்லாவிட்டால் — துன்பம்
சம்பாதிப்பது போதவில்லை என்றால் — துன்பம்
உள்ளவனுக்கு உள்ள தெல்லாம் — துன்பம்
இல்லாதவனுக்கு இல்லையே என்ற — துன்பம்
ஆனால்
இருப்பதில் நிறைவு கண்டால் அதுவே
எல்லையற்ற — இன்பம்

R. அதிதி

# துறவறத்தாரும் ஏழ்மையும்

துறவறத்தார் ஏழ்மை வாழ்வைப் பின்பற்றி உதவி தேவைப்படுபவர்களுக்கு தங்களை எப்போதும் துறந்தவர்களாக செயற்படவேண்டும் என்பதைமையமாகக் கொண்டு திருத்தந்தையின் புதன் கிழமைப் (30-11-94) பொதுப் பேட்டி இருந்தது.

இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் ஒரு வழியான ஏழ்மை வாழ்வின் முக்கியத்துவத்தை திருச்சபை எப்போதும் உணர்ந்தேயுள்ளது. அபரிமிதமான செல்வங்களும், பேராசைகளும் அதிர்ச்சி தரக்கூடிய ஏழ்மை நிலைகளுடன் பக்கம் பக்கமாய் வாழும் இன்றைய உலகில் திருச்சபையானது இயேசுவின் ஏழ்மை குறித்து எடுத்துக்காட்டவும், ஏழைகளுக்கான அன்புடன் கூடிய அக்கறையையும் பின்பற்ற ஆவல் கொள்கின்றது.

எளிய உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்கின்றார் கிறிஸ்து. ஏனெனில் இவர்களின் நம்பிக்கை பணத்திலோ, ஒரு சில பொருட்களிலோ அல்ல, மாறாக இறையரசில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வுலகின் பொருட்களைப்பொறுத்தவரையில் தன் அனைத்துச் சீடர்களும் விடுதலை அடைந்தவர்களாய் இருக்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றார் இயேசு. ஆனால் அவர்களுள் சிலரைத் தனிப்பட்ட விதமாக அனைத்து உலகச் செல்வங்களையும் மறுதலித்து தனக்காக ஏழ்மையையேற்று தன்னைப் பின்செல்லவேண்டுமென அழைக்கின்றார். துறவறத்தார் தங்களின் உள்மன, மற்றும் வெளிப்புற ஏழ்மையைக் கடைப்பிடித்தல்கள் மூலமோ, மற்றர்களின் தேவைகளுக்குத் தங்களை தாராள மனத்துடன் திறந்தவர்களாகச் செயற்படுதல் வழியாகவோ தங்களை இறைவனுக்கு முற்றிலுமாகக் கையளிக்கும் வண்ணம் தனிப்பட்ட விதமாகவும் குழுவாகவும் அழைப்புப் பெற்றுள்ளார்கள்.

ஏழ்மை குறித்து நற்செய்தி காட்டும் அறிவுரையைப் பின்பற்றுவதன் மூலம் துறவறத்தார் தந்தையாம் இறைவனின் விருப்பத்திற்கு முழு நம்பிக்கையுடன் தங்களையே கையளிப்பதைப் பின்பற்றுகின்றனர்.

தந்தையின் விருப்பத்திற்கு முழு நம்பிக்கையுடன் தன்னையே கையளித்ததைத்தான் இயேசுவும் வாழ்ந்துகாட்டினார், போதித்தார். மற்றும் திருச்சபையின் விலைமதிப்பற்ற பாரம்பரியமாக விட்டுச் சென்றார்.

---

## காலிமுகத்திட....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்டு அங்கு ஒன்பது சுகாதார நிலையங்கள் அமைக்கப் படவுள்ளன.

இவ்வைபவத்தில் சுமார் ஐந்து லட்சம் வரையிலான மக்கள் கலந்து கொள்ளுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. வண. பிதா ஜோசேவ் வாஸ் அடிகளாரின் சொந்த இடமான கோவா நகரிலிருந்து 2000க்கும் மேற்பட்ட யாத்திரிகர்களும், இந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து 50 கத்தோலிக்க ஆயர்களும் வத்திக்கான் பத்திரிகையாளர்களும் இங்கு வரவுள்ளோரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

காலி முகத்திடலில் இடம் பெறவுள்ள பகிரங்க ஆராதனைகள் உள்ளூரில் மட்டுமன்றி செய்மதிகளின் உதவியுடன் ஆசியநாடுகளிலுள்ள தொலைக்காட்சி நிறுவனங்களினாலும், நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளன.

# தொல்காப்பியத்தில் திருமணம்

● என். மீரா

திருமணம் என்ற சொல்லுக்கு பண்டைத் தமிழர் கடிமணம், மன்றல் வதுவை, வதுவை மணம், வரைவு என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். இன்னும் இக்காலத் தமிழரிடையே நாம் பார்க்கும் முறையாகிய மனப்பொருத்தம் பார்க்கும்முறை அதாவது திருமணம் பேசுவதற்கு முன்னர் மணமகனுக்கும் மணமகளுக்கும் மனப்பொருத்தம் இருக்கின்றதா என்று பார்க்கும் பழக்கம் அக்காலத்திலும் இருந்திருக்கின்றது.

பழைய இலக்கண நூலாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தொல்காப்பியத்தில். மெய்ப்பாட்டியலில் இரண்டு அருமையான நூற்பாக்கள், திருமணப்பொருத்தங்கள் எப்படி அமையவேண்டும் என்பதையும் எப்படி அமையக் கூடாது என்பதையும் தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றன. இதன்படி பொருத்தம் பார்க்கும் பழக்கம்மிகப்பழைய தமிழர் வழக்கம் என்று அறிகின்றோம்.

சமுதாயத்தின் நன்மையையும் இல்லறம் மேற்கொள்ளும் மணமக்களின் நல்வாழ்வையும் கருத்திற் கொண்டவை இப் பொருத்தங்கள்.

பிறப்பு குடிமை ஆண்மை
ஆண்டோடு உருவு
நிறுத்தக் காமவாயில்
நிறையே அருளே
உணர்வொடு திருமண
முறையுடன் சிறந்த
ஒப்பினது வகையே

என்கின்றது தொல்காப்பியம். பெருமைசார்ந்த குடியிலே பிறத்தல், பிறந்த குடியின் ஒழுக்கங்களிலிருந்து வழுவாமை, ஆண்மை அதாவது முயற்சியோடு செயற்படும் ஊக்கம்,ஆண் பெண்ணை விட வயதில்மூத்தவனாகஇருத்தல், ஆண் பெண் இருவரின் உடல் அமைப்பு வளம், நல்ல நலம், அழகு, இன்பம் நுகர்வதற்கு வேண்டிய உணர்வும் சக்தியும், அன்பும் இருபாலாருக்கும் சமமாக இருத்தல்,இருவரும் தமது குடும்பச் செய்திகளைப் போற்றிக் காத்தல், இருவரும் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவர்களாக இருத்தல், வாழும் உலகத்தில் செய்யக் கூடியது எது என அறிந்து செய்தல், இருவருமே செல்வ நிலையில் சமதகுதி உள்ள குடும்பத்தவராக இருத்தல் என்ற இந்த பத்து நிலைகளிலும் பொருத்தம் பார்த்து இணையும் தலைவன் தலைவியர் இல்லறமே இனிய நல்லறமாகும் என்று தொல்காப்பியர் வகுத்துக் கூறியுள்ளார்.

இல்லற வாழ்வில் நுழைவோருக்கு இருக்கக் கூடாத பொருத்தங்களையும் தொல்காப்பியர் கூறுகின்றார். தற்பெருமை கூடாது, கொடுமை அதாவது கோபங்கொள்ளும் மனப்பான்மை கூடாது,வியப்பு இருவரும் தம்மை ஒருவராகக் கருதலில் வியத்தல் கூடாது, பொற்காப்பு – உறுதியில் இருந்து தளர்தல் கூடாது. குடிமை – கணவனோ மனைவியோ தன் குடிப்பிறப்பை உயர்த்திப் பேசுதல் கூடாது. மறதிகூடாது. கணவனோ மனைவியோ ஒருவரை ஒருவர் மற்றவரோடு ஒப்பிட்டுப் பேசுதல் கூடாது. இது வீணான ஐயத்திற்கு இடமளிக்கும். இவ்வாறு இல்லற வாழ்வில் நுழைவோருக்கு இருக்க வேண்டிய பொருத்தங்களையும், இருக்கக் கூடாத பொருத்தங்களையும் அக்காலத்திலே தொல்காப்பியம் வகுப்பிட்டுக் கூறியுள்ளது.

எனவே திருமணம் என்றும் சமுதாய வாழ்வினை ஒரு ஆண், பெண் இல்லற வாழ்விற்கு தொடக்க விழாவாக ஊரும் உறவும் அறியச் செய்வது என்று வகுத்த காலத்திலேயே அந்த உறவு நீடித்து நிலைப்பதற்கான பொருத்தங்களையும் பார்த்து ஒருவரையும் இணைக்கும் வளக்கத்தையும் தமிழ்ச் சமுதாயம் வகுத்துவிட்டது.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர் இயற்கைக் கூறுகளின் செயற்பாடுகள் கொண்டே தங்கள் செயல்களையும் செய்யத் தொடங்கினர். திருமணத்திற்குரிய காலமாக இளவேனிற் காலத்தையே கொண்டனர். திருமணத்தினை மேற்கொள்ளும் நற்பொழுதாக மிக்க இருள் மயங்கிய அழகுடைய விடியற்காலத்தையும், திங்களும் ரோகினியுடன் சேர்ந்த நாளையும் சிறப்பாகக் கொண்டனர். நாளடைவில் இவற்றிலும் சில மாற்றங்கள் அவரவரது குலத்திற்கு ஏற்றவாறு அமைந்தன. பொதுவாக கும்பவேளாளர் சித்திரைமாதத்தில் திருமணம் நடத்துவதில்லை. இப்பொழுது பெருவாரியான திருமணங்கள் வைகாசி, ஆனி, ஆவணி மாதங்களில் நடைபெறுகின்றன. இதற்குக் காரணம் இம் மாதங்களில் பருவநிலை சிறிது பக்குவமாக இருக்கும்,மேலும் திருமணவினைக்கு வேண்டிய மணமான மல்லிகை மலர் இம்மாதங்களில் ஏராளமாகக் கிடைக்கும் என்பதால் ஒரு சிலர் கால நெருக்கடியை மனதிற் கொண்டு ஆடிமாதத்தில் கூட திருமணங்களை வைத்துக் கொள்வதுண்டு. தற்காலத்தில் சீர்திருத்தத் திருமணங்கள் வழக்கில் வந்த பிறகு நாளென்ன செய்யும், கோளென்ன செய்யும் எனத் திருமணம் செய்வதற்குப் பொருத்தமான அதாவது எல்லோருக்கும்வசதியான நாளில், நேரத்தில் திருமணம் நடத்துகின்றனர்.

## இயேசு ஐயா!

விழியிருந்தும்
விழியற்றவர்களாக
வாழ்ந்த எம்மை
உமது கொடூர மரணத்தால்
விழித்தெழச் செய்தவனே
இயேசு ஐயா!

வாழ்வு இல்லையென்று
வாழ்க்கையை வெறுத்த
எமக்கு
உயிர் தரும் அழியாத
வார்த்தைகளால்
புது வாழ்வு கொடுத்தவனே
இயேசு ஐயா!

சொந்த மண்ணையிழந்து
பெற்றவர், உற்றவர்
உறவுகளிழந்து,
அனாதைகளாகி அன்னியரின்
சிறையிலடைக்கப்பட்டு
வாழ்க்கையே கேள்வியாகி
நாம் தள்ளாடிய போதும்
எமைப் படைத்தவனே!
உனை நினைக்கையில்
கரத்தால் எமைத் தாங்கி
விடையாக வந்தவனே
இயேசு ஐயா!

S. P. ரவிசங்கர்

## தேடிவரும் வள்ளலிடம் நாம் கேட்பதென்ன?

அன்று இறைமகன் கிறிஸ்து உலகிற்கு வந்தபோது அவர் மனிதனிடம் உள்ளதை நோக்கவில்லை. அவனுடைய உள்ளத்தைத்தான் நோக்கினார்,உள்ளம் தூய்மையாக இருக்கிறதா? என்று உற்றுப்பார்த்தார். தூய்மையற்று இருந்தபோது அவ்வுள்ளத்தின் மாசை, பாவ இருளைப் போக்கினார், மன்னித்தார். உள்ளச் சுமை நீக்கி முதலில் சுகம் அளித்தார். பின்பு உடலுக்கு சுகம் அளித்தார்.

''ஆன்மாக்களை தேடி மீட்கவே வந்தேன்'' என்றார் கிறிஸ்து. இதுவே அவர்பணி. ஆன்மாவுக்கு மீட்பு அருள்வது அத்துடன் அந்த ஆன்மாவுக்கு துணையாக நிற்கும் உடலுக்கு விடுதலை அளிப்பது, மீட்பு வழங்குவது.

இன்றும் என்றும் கிறிஸ்து நம் மத்தியில் பிரசன்னமாயிருக்கின்றார். திருவருட்சாதனங்கள் வழியாக அவர் நம்மிடம் வருகிறார். நம்மோடு உறவாடுகிறார். எனவே நம்மை தேடி வரும் அந்த தெய்வீக வள்ளலிடம் நாம் இன்று என்ன கேட்போம்? ''ஆண்டவரே! பொருளாதாரத் தடையை நீக்கிவிடும். போக்குவரத்து வசதிகளை இலகுவாக்கும். நம் நாட்டிற்கு விரைவில் சமாதானம் தாரும்'' என்று தான் முதலில் கேட்போம். இல்லை! மாறாக நாம் முதலில் கேட்க வேண்டியது ''ஆண்டவரே! நாம் உம்மை மறந்து, உம்மைப் பிரிந்து வாழ்ந்து விட்டோம். விடுதலை பற்றிய சிந்தனை எங்கள் உள்ளத்தில் சிறிதும் இல்லை. அந்த எண்ணம் எம்மைவிட்டு அகன்று விட்டது. ஆகவே சரீர விடுதலையை மட்டும் தேடாமல், ஆன்ம விடுதலையிலும் முழுமையான கவனம்செலுத்த எமக்கு வரம் தந்தருளும் இறைவா'' என்று வேண்டுவோம், எம்மை தேடிவந்த மீட்பர் எல்லா வேளைகளிலும் எங்களுக்கு உதவிடுவார்.

சகோ. ம. பத்திநாதர்
புனித சவேரியார் குருமடம்.

| நற்செய்தி படிப்போம் | 9 |
|---|---|

## இயேசுவின் அதிகாரபோதனை ஆர்வமிகு பதில்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இறைமகன் இயேசுவின் இரண்டரைஆண்டுப்பணி வாழ்வில் பலவிதமான எதிர்ப்புக்கள்—மோதல்களைச் சந்திக்கின்றார். பலவித சவால்களுக்கு அவர் முகங்கொடுக்க வேண்டியவராக இருக்கின்றார்,கலிலேயாவிலிருந்து ஐந்து மோதல்கள், யெருசலேமிலிருந்து வந்த மறை நூல் அறிஞரால் மூன்று மோதல்கள். இறுதியில் யெருசலேமிற்குச் செல்லும்போது அங்கு ஐந்து மோதல்களும் அவரை எதிர்நோக்கிய வண்ணம் இருந்தன. காய்த்த மரத்திற்குத் தானே கல்லெறி என்றும், சீர் திருத்தவாதி தானே பொதுசன விரோதி என்றும் கூறுவார்கள். இதே போன்று சீரழிந்த சமுதாயத்தைச் சீரோடு வாழச் செய்ய உழுத்துப்போன நெஞ்சங்களை உயிரூட்டமுள்ளதாக வளர்த்தெடுக்க உலகையே சதமென நம்பி வாழ்ந்தவர்களை உன்னதரின் மக்களாக மாற்றியமைக்க வந்தவர் இறைமகன் கிறிஸ்து ஆனால் அவருடைய பணிவாழ்விற்காகக் காத்திருந்ததோ எதிர்ப்புகளும் மோதல்களும் தான். இவற்றையெல்லாம் இயேசு எப்படிச் செய்தார். முட்டி மோத வந்தவர்களின் உள்ளங்களை எப்படி மோப்பம் பிடித்து கண்டறிந்து பதில் கொடுத்தார் என்பதை இவண் நோக்குவோம்.

கலிலேயப் பணி வாழ்வில் இயேசு சந்தித்த ஐந்துமோதல்கள்:—

மறை நூல் அறிஞர் என்போர் பழைய ஏற்பாட்டுநூல்களையும், யூத சமய ஒழுக்க ஆசாரங்களையும் அலசிஆராய்வதையே அலுவலாகக்கொண்டவர்கள். இவர்களில் பலர் பரிசேயர்கள், சிலர் சதுசேயர்கள். சமயம், ஒழுக்கம், அரசியல் போன்றவற்றில் தங்களுக்குள்ளே கருத்து வேறுபாடு கொண்டவர்கள். இங்கு விவாதிப்பவர்கள் பரிசேயக் கட்சியைச் சேர்ந்தவர்கள். சட்டதிட்டங்களைச் சரியாக அனுசரியாத பொது மக்களிடமிருந்து தாங்கள் ''பிரிக்கப்பட்டவர்கள்'' (பரிசேயர்) தாங்கள் மட்டுமே புனிதமானவர்கள். பிறரெல்லாம் தீட்டுப்பட்ட பாவிகள் என்பர் இத்த ஆணவம் கொண்டோர் படிப்பு, பணம், பதவிபடைத்த இவர்கள் பணிவு, பண்பு, தொண்டு என வாழும் இயேசுவோடு மோதுவதில் வியப்பில்லை.

முதல் விவாதம்—

எதிர்ப்பு உள்ளத்திலிருந்து உற்பத்தியாகின்றது. (2: 8)— திமிர்வாதக்காரனைக் கட்டிலோடு கொண்டு வந்தவர்களின் விசுவாசத்திற்காக, ''உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன'' என்று நோயாளியைப் பார்த்துக் கூறுகின்றார் இயேசு' அன்றைய மக்களிடையே நிலவிய கருத்து எதுவெனில் இவ்வுலகில் தீமை பரவுதற்குக் காரணம் தீமையின் ஆதிக்கத் தலைவனாகிய சாத்தான் என்பதாகும். மனிதனின் உடலுள நோய்களுக்குக் காரணம் அவனுடைய பாவம், பாவத்திற்குக் காரணம் சாத்தான். எனவே தான் திமிர்வாதக்காரனுடைய நோயைக் குணப்படுத்துமுன் அவனுடைய பாவத்தைப் போக்கி விட்டால் நிச்சயம் அவனுடைய உடல் நோய் நீங்கிவிடும் என்றும், பாவங்களைப் போக்கும் இவர் கடவுளின் மகன் என்பதையும் நிரூபிக்கின்றார் இயேசு. உள்ளிருந்து உற்பத்தியான பரிசேயரின் எதிர்ப்புக்கு சாட்டையடி கொடுக்கும் முகமாக திமிர்வாதக்காரனை நோக்கி ''நான் உனக்குச் சொல்லுகிறேன்,உன் படுக்கையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப்போ'' என்றதும், அவனும் அவர் கூறியவாறே செய்தான்.

இரண்டாவது விவாதம்—

எதிர்ப்புசீடர்களிடம்தெரிவிக்கப்படுகின்றது. (2:16) யூதசமுதாயத்தில் இடையர்கள், வரி வாங்குவோர், கழுதை-ஒட்டகம்வைத்திருப்போர்,ஆடு-மாடு வெட்டுகிறவர்கள், ஏழைகள் அனாதைகள், கைம்பெண்கள் பாவிகள் போன்றோரை தங்கள்சமுதாயத்திலிருந்துஒதுக்கி வைத்தார்கள் இம் மறைநூல் அறிஞர்கள். இப்படிப்பட்டவர்களில் ஒருவனாகிய லேவியின் வீட்டில்தான் இயேசு விருந்துண்ண அமர்கின்றார்.

பரிசேயரைச் சேர்ந்த மறைநூல் அறிஞர், அவர் பாவிகளோடும், ஆயக்காரரோடும் உண்பதைக்கண்டு அவருடைய சீடரை நோக்கி, ''உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் உண்பதேன்'' என்றனர். தன்னலமற்ற யேசுவிடம் தட்டிக்கேட்கத் திராணியற்றவர்கள் அவர் தம் சீடரிடம் கேள்வியைத் தொடுக்கின்றார்கள். தொடுக்கப்பட்ட கேள்வி இயேசுவின் காதில் விழுகின்றது. கேள்வி கேட்டவர்களின் வாயை அடைக்கும் முகமாக ''இயேசு மொழிகின்றார்'' மருத்துவன் நோயற்றவர்க்கன்று நோயுற்றவர்க்கே தேவை. நீதிமான்களையன்று பாவிகளையே அழைக்க வந்தேன் என்று தன்னுடைய வருகையையும் தன்னுடைய ஆளுமையையும் தக்க தருணத்தில் அவர்கள் முன்னிலையில் தெளிவாக்குகின்றார். (வளரும்)

● S. அந்தோனிப்பிள்ளை
மறையாசிரியர்

## ஜனாதிபதி சந்திரி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறைதினமாக அரசு பிரகடனப்படுத்தலாமெனவும், தற்பொழுது தண்டனையை அனுபவித்துவரும் கைதிகள் பலருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படலாமெனவும் கொழும்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுகதை:

# இதற்கு விடிவு எப்போது?

★ N.ஆனந்தி

ஒரு விதவைத் தாய்க்கு ஓர் ஆண் பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும் இருந்தார்கள். உள்ளங்கை அளவு நிலம் கூட அவர்களுக்கு இல்லை. அவள் மகன் மிகவும் புத்திசாலி. ஆரம்ப பள்ளி ஆசிரியர் அவனை உயர் நிலைப்பள்ளிக்கு அனுப்பவேண்டுமென்று அவன் தாயிடம் பரிந்துரைத்தார். பையன் பக்கத்து நகரில் இருக்கும் அரசினர் உயர் நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்க்கப்பட்டான்.

கூலிவேலை செய்து பிழைப்பை நடத்தி வந்த அந்த விதவைக்கு கடந்த சில நாட்களாக கூலி வேலை கிடைக்கவில்லை. பக்கத்தில் இருந்த காட்டுக்குப்போய் விறகு பொறுக்கிக் கொண்டு வந்து மூன்று கல் தொலைவிலுள்ள நகரத்து தேநீர் கடைகளில் விற்று, அதைக் கொண்டு தன் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க எண்ணினாள். அப்படியே ஒரு நாள் காட்டுக்குப் போனபோது இரவு வெகுநேரமாகியும் அவள் வீடு திரும்பவில்லை. பிள்ளைகள் இருவரும் வீட்டிற்கு வெளியேநின்று அழுதுகொண்டிருந்தனர். காட்டுக்குப் போனவள் வழியைத் தவற விட்டுவிட்டாள். இருட்டில் அங்கும் இங்கும் அலைந்த போது அவள் காலில் ஒரு குச்சி குத்திக் கிழித்து விட்டது. வலி தாங்க முடியாமல் சிரமப்பட்டு வழியைக் கண்டு பிடித்து ஒரு வழியாக இரவு 10 மணிக்கு வந்து சேர்ந்தாள்.

அடுத்த நாள் கடுமையான காய்ச்சல் வந்து விட்டது. பங்குக் குருவை வரவழைத்து மந்திரிக்குமாறு வேண்டினாள். வேதனையை தாங்க முடியாது சினந்து, மனத் தைரியத்தை இழக்கும் வேளையில் பங்குக் குருவும் வந்தார். ''சுவாமி என் இரண்டு பிள்ளைகளையும் மடத்திலே சேர்த்திடுங்கோ. நான் செத்துப்போறேன் நிம்மதியாய்'' என்று அவள் சொன்னாள். அவள் அருகில் நின்று கொண்டிருந்த 13 வயதுபையன் சுவாமியாரிடம், "சுவாமி, எங்கள் அம்மாவை வயோதிபர் மடத்திலே சேர்த்திடுங்கோ; நாங்கள் இரண்டு பேரும் செத்துப் போறோம்'' என்றான், இந்த வார்த்தைகளுக்கு என்னதான் மந்திர சக்தியோ தெரியவில்லை. அந்த விதவைத் தாயின் முகத்தில் தோன்றிய கவலைக் கோடுகள் மறைந்து கபடற்ற தூய புன்னகை பரவலாயிற்று. கவலையை மறந்து மனம் விட்டுச் சிரிக்கின்றாள். தன் துன்பத்திற்குப் பொருள் கண்டாள்.

அன்பிற்காகத் துன்பத்தை அனுபவிக்கின்ற போது அது தியாகமாகின்றது. இயேசு தரும் இளைப்பாற்றி, சாவதிலோ, துன்பத்தைக் கண்டு அஞ்சி ஓடுவதிலோ அடங்கியில்லை. ''சுமை சுமந்துசோர்ந்திருப்பவர்களே என்னிடம் வாருங்கள். உங்கள் சுமையை அகற்றுவேன்'' என்று இயேசு சொல்லவில்லை. மாறாக ''உங்கள் சுமையை இனிதாக்குவேன்'' என்று கூறுகிறார்.

# வேதாகமத்தின் புனிதத்தன்மை

உலகில் மிகவும் புகழ்பெற்ற நூல் விவிலியமாகும். முதன் முதல் அச்சேறிய நூலும் இதுவாகும். இந்நூலைப்போன்று அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் வேறொன்றுமில்லை. 'பைபிள்' என்ற ஆங்கிலச்சொல் 'பிபிளுஸ்' என்ற கிரேக்கச்சொல்லில் இருந்து பிறந்ததாகும், இது எழுத பயன்பட்ட ஒரு புல் தண்டின் பெயர். அதிலிருந்து 'பைபிள்' என்ற சொல் உதித்தது. இந்நூலில் 46 பழைய ஏற்பாட்டு நூல்களும், 27 புதிய ஏற்பாட்டு நூல்களுமாக மொத்தம் 73 நூல்களே வேதாகமத்தில் இறையூக்கத்தால் எழுதப்பட்ட நூல்களென வரையறை செய்யப்பட்டு காணக்கிடக்கின்றன. ஏனைய இறையூக்கம் கொண்டிராத நூல்கள் (அடிப்படைவாதிகள் தர்க்கவைத்துக் கொண்டிருக்கும் நூல்கள்) இதில் இடம்பெறவில்லை, அவைகள் ''அப்போ கிரிபா'' அதாவது 'மறைவு நூல்களென' அழைக்கப் படுகின்றன.

கிறிஸ்தவ சமுதாயம் இப் புனித விவிலியத்தை புனிதமாக கருதி விசுவாசத்தின் ஆணி வேராய் பாதுகாத்து வந்தது. ஆலயங்களிலும் செபக் கூடங்களிலும் மரியாதை செய்யப்பட்டு வாசிக்கப்பட்டது.

கிறிஸ்தவ சமுதாயம் இப் புனித நூலை தமது சொத்தாக இறைவன் தந்த அருமையான முத்தாக நினைத்து பாதுகாத்து வந்தது. காரணம் என்னவென்றால் இது இறைவன் தந்த நூல், இறைவனின் எண்ணங்களைத் தாங்கி வந்த நூல், கடவுளால் எழுதப்பட்ட நூல். ஆதலால்தான் இந்நூலின் புனிதத்தன்மைக்கு செங்குருதி சிந்தி சான்று பகன்றனர். கலாபனைகளின் போது இவ்வேத நூலை பாதுகாப்பதற்காக விலங்குகளுக்கு தங்களையே உணவாக அளித்தனர். எங்கெங்கு சென்றாலும் இப்புத்தகத்தை எடுத்துச் சென்று பலரும் வாசிக்கும்படி செய்தனர். விவிலியத்தைப் பற்றி ஆராட்சி நூல்கள் பல எழுதப்பட்டன. புனித நூலும் புனிதமாக போற்றப்பட்டது.

19ஆம் நூற்றாண்டளவும் விவிலியத்தின் புனிதத்தன்மையில் ஒருவரும் ஐயம் கொள்ளவில்லை. மறுத்துக் கூறவுமில்லை. 19ஆம் நூற்றாண்டில் நிலைமை மாறியது. புதிய கலைகள் வளர்ச்சி அடைந்தன. விஞ்ஞான, சமூக, பண்பாட்டு சூழலில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம். விஞ்ஞான நிபுணர்கள் பிறஞானக்கொள்கைகளை மையமாகக் கொண்டு விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு விவிலியத்தை அணுகினர். விஞ்ஞான கொள்கைகளுக்கு முரணானவைகளை விவிலியத்தில் கண்டனர். அதனால் விவிலியம் புனித நூல் அல்ல என்று சாதித்தனர். வரலாற்று அறிஞர்கள், ஒழுக்கநூல் அறிஞர்கள், இலக்கிய அறிஞர்கள் தங்கள், தங்கள் நிலைமைகளில் உள்ள கண்ணோட்டத்தோடு வேதாகமத்தை அணுகி ஏமாந்தனர். அதனால் விவிலியத்தின் புனிதத்தன்மையை, இறைத்தன்மையை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இக்கால கட்டத்தில்தான் எமது தாய்த்திருச்சபை அவசரமாக வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி விவிலியத்தின் புனிதத்தன்மை எதில் அடங்கியுள்ளது எனக் காட்டவிழைந்தாள். வேதாகமம் புனிதமானது ஏனென்றால் காலங்கடந்த இறைவனை முதலாசிரியராகக் கொண்ட நூல். அது இறை ஏவுதலால் எழுதப்பட்ட நூல் எனக் கூறினாள்.

பாப்பு 13ஆம் சிங்கராயரும் ''பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட இந்நூல் கடவுளை ஆசிரியராக கொண்டுள்ளது என்ற உண்மையில் அடங்கி இருக்கிறது வேத நூலின் புனிதத்தன்மை'' என்று விளக்கினார். வேதாகமம் இறையூக்கத்தினால் இறை வெளிப்பாடுகள் வழியாக இறைஏவுதலால் எழுதப்பட்டது.

வாய்மொழியாக வந்த இறைவனின் செயல்கள் பற்றிய பாரம்பரியத்தை மனித ஆசிரியர்களால் இறைவனின் துணையோடு பொறுக்கி, தொகுத்து, விளக்கி எழுதப்பட்டுள்ளது. இதில் கருவித்தன்மை முக்கியமானது. கடவுள் மனிதனை கருவியாக பயன்படுத்தினார்.. ஆகவே கருவியின் நிலையில் இருந்து கொண்டு மனிதன் விவிலியத்தை எழுதினான். ஆதலால் கருவி நிலையில் உள்ள மனிதன், அக்காலத்தைய இலக்கிய நடை, சொந்த ஆற்றல், தம் அறிவு, கற்பனாசக்தி புராண கதைகள் போன்றவற்றை செப்பனிட்டு வேதாகமத்தில் பதித்தார்கள். இதில் இருந்து இறைவனே முதல் ஆசிரியர் என்று எம் அன்னையாம் திருச்சபை விளக்குகின்றாள்.

எனவே எம்மிடையே விவிலியம் சார்பாக கொண்டுள்ள தப்பறையான கொள்கைகளை தகர்த்தெறிந்து விவிலியத்தின் புனிதத்தன்மையை உணர்ந்து அதற்குரிய மரியாதையை செலுத்தி நாமும் அதனைப் பின்பற்றி இறைவிசுவாசத்திலும் தளரா நம்பிக்கையிலும் மீண்டும் மீண்டும் உறுதி பெறுவோம்.

M. P. விமல்
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

# மனச்சான்றின் குரல்

ஒன்றிற்கு பல பெயர் கொடுப்பதால் மட்டும் அதன் விளக்கம் முழுமை பெற்றுவிடாது. மனச்சாட்சி, மனச்சான்று, மனக்குரல், இறைவனின் குரல் என்றெல்லாம் கூறினாலும் அந்த உள்ளார்ந்த நிலை எளிதான விளக்கத்திற்குள் அடங்குவதில்லை. ஆனால் அதே வேளை ஒழுக்க விதி சார்ந்த எந்தவொரு விபரத்திற்கும் மையமானதாகும்.

மனச்சான்றின் குரலை, அந்த உள்ளார்ந்த நிலைக்கு அதற்கே உரிய உயரிய இடத்தைக் கொடுக்காத ஒரு கலாசாரத்தை காட்டமுடியாது. ஆதிகால மனிதனை நாம் குரங்கோடு தொடர்புபடுத்தி அடையாளம் கண்டுகொண்டால் மனச்சான்றைப் பொறுப்புணர்வோடும் ஒழுக்க விதிகளோடும் தொடர்புபடுத்தியே அவன் கண்டான்.

கடந்த நூற்றாண்டுகளைத் திருப்பிப்பாருங்கள். முதன்மை ரீதியாக அல்லது இறைவனின் குரலாக ஏற்று, உலகின் எதிர் பார்ப்பு விதிகளை ஏற்க மறுத்து தன்னலமே கண்ட மனித உள்ளங்கள் நூற்றுக் கணக்கு. சோக்கிரட்டீஸ், அண்ணல் காந்தி, வீரபாண்டிய கட்டப்பொம்மன் என்பவர்கள் ஒரு சிலரே.

மனச்சான்றின் தன்மைக்கு, தத்துவரீதியாக முதன் முதலில் விளக்கம் கொடுத்தவர்கள் கிரேக்கர்களே. ஒழுக்க விதி பகுப்புணர்வுப் பண்பை உருவாக்குவதில் ஒருவரின் தன்னுணர்வு, விழிப்புணர்வின் பங்கு மனச்சான்று என்று விபரிக்கப்பட்டது. நன்மை தீமையைப் பிரித்தெடுக்கத் தெரிந்த சாதாரண அறிவாக மட்டும் அவர்கள் இதனை நோக்கவில்லை. இது ஏட்டுக் கல்வி அறிவல்ல, மாறாக நடைமுறைப்பகுப்புணர்வுப் பங்கு. மேலும் இதில் நம் உணர்வு, மற்றும் ஊக்கத்தின் பாதிப்பையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இதனால்தான் நல்ல மனச்சான்று என்றும் தீய மனச்சான்று என்றும் பிரித்துப் பார்த்தனர். கிரேக்கர்களைப் பொறுத்தவரையில் மனச்சான்று என்பது ஒரு செயலுக்குப் பின் அது குறித்த விழிப்புணர்வுத் தீர்ப்பைத் தருவது மட்டுமல்ல, மாறாக ஒரு செயலுக்கு முன்னரும் ஒரு செயலின்போதும் விழிப்புணர்வுச் செயற்பாட்டைக் கொண்டிருப்பது. தவறு செய்தபின் அதன் பாடத்தை, வேதனையை உணர்கின்றோமே, அது மட்டுமல்ல மனச்சான்று. அதே வேளை இது உடல், உள்ளம் மற்றும் சமூகக் கூறுகளின் இயக்கச் செயல் அல்ல. மாறாக மதிப்பீடுகளின் மகத்துவத்தை உணர்ந்து கொள்வதின் தேவையை உள்ளடக்கிய அதை நோக்கி முழுமனிதனின் தேட்டம் ஓட்டம்.

ஒழுக்க விதிசார்ந்தவைகள் நாம் என்னென்ன செய்ய வேண்டுமென்பதைக் காட்டுவது மனச்சாட்சி. ஒழுக்க ரீதி விதிகள் பற்றிய அறிவையும் அவ்விதிகளை அமுல்படுத்துவதற்குரிய வழிவகைகளையும் தருவது மனச்சாட்சி. மொத்தத்தில் நம்மைக் குறித்த பிறப்பு வகையான விழிப்புணர்வே மனச்சாட்சி. ஒழுக்க விதிப் பொறுப்புள்ளவன் என்பதை உணர்ந்து அதில் சந்தேகமின்றி நம் உள்மனது நம்மையே ஏற்றுக்கொள்வதே மனச்சாட்சி. ஒழுக்க விதி சார்ந்த விழிப்புணர்வை உள் உணர்வைக் குறித்து நிற்பதே மனச்சாட்சி. இந்த ஒழுக்க விதிசார்ந்த விழிப்புணர்வு எங்கிருந்து பிறக்கின்றது எங்கிருந்து வருகின்றது என்ற கேள்வியைக் கேட்டுப்பார்ப்போம்.

குழந்தைப் பருவத்திலேயே தொடங்கும் இது வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றது. இன்பம், துன்பம், வெகுமதி, தண்டனை என்பதிலே அடிப்படை தன் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றது. கை ஆட்டுகின்றது ஒரு குழந்தை. இது மனச்சான்று வழியான ஒரு வாழ்க்கை என்று எவரும் அழைப்பதில்லை. தொட்டால் சுடுவதால் விலக்குகின்றது. தவறிழைத்தால் பிரம்புவரும் எனத்தெரிவதால் அச்சம் தவறைத் தடைசெய்கின்றது. ஆனால் காலப்போக்கில் இதே குழந்தை 6, 7 வயதிற்குப் பின் இந்த விதிகளை தன் உள்மனதிற்குள் அதன் காரணங்களை ஆராய்ந்து அவைகளுக்குப் பின் இருக்கும் மதிப்பீடுகளை படிப்படியாக உணர்கின்றது. இங்கு இவ்விதிகளுக்கும் படிகள் என்பது அவைகள் நல்லவைகள் என்பதிலிருந்து பிறக்கின்றது.

இது அறிவு சார்ந்த வளர்ச்சி மட்டுமல்ல. மாறாக முழுமனித வளர்ச்சியோடு தொடர்புபட்டு மற்றவர்களின் ஆதரவோடு இடம்பெறுகின்றது. இதுவே தனி மனித ஒழுக்கவிதி உறுதிப்பாடாக உருவெடுக்கின்றது. இங்கு சட்டமோ வெளிப்புற அதிகாரமோ தாங்கிப்பிடிக்க வேண்டிய தேவை இல்லை என்ற நிலை உருவாகின்றது. ஆனால் பல வேளைகளில் நாம் முரண்பாடுகளைக் காண்கிறோம். நான் என் மனச்சாட்சிக்கு இசைந்தே நடந்தேன் என்று பலர் கூறும்போது அது எல்லாமே சரியான பாதையாக இருந்ததில்லை என்பதையும் பார்க்கின்றோம். தவறு செய்வதால் கூட ஒருவன் தன் மனச்சான்றின் குரலுக்குக்கட்டுப்பட்டு இருப்பானேயானால் அங்கு மனச்சான்று என்ற ஒன்று மட்டுமே காரணமாக இருக்க முடியாது. அந்தத் தவறுக்கும் ஒரு நல்ல காரணம் இருக்கவேண்டும். அல்லது அந்த மனச்சான்றிற்கேற்ற கேள்வி பிறக்க வேண்டும். பாவத்திலேயே வாழும் மனிதன் அதிலேயே மூழ்கி அதற்கான நியாயத்தையும் கற்பிக்க முயலும்போது மனச்சான்றும் பாழாய்ப்போய் விடும். உதாரணமாக மனிதனை மனிதன் உண்ணும் காட்டுமிராண்டி வாழ்க்கை உலகில் இருந்ததுண்டு. இவர்கள் உணவுக்காய் இன்னொரு மனிதனைக் கொன்றபோது அது தவறு என்று அவர்களின்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 8 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 19 | எம் வாழ்வின் வழி யேசு |

(இதழ் 14 தொடக்கம் 23 வரை)

இ) 1. எண்ணிறந்த விடுதலை வீரர்களிலெல்லாம் மேன்மை மிக்கவர், எடுத்துக்காட்டாகத் திகழும் வீரர் யார்?

2. புனித மாற்கு நற்செய்தியில் இயேசு ஆற்றிய புதுமைகள் எத்தனை உள்ளன?

3. அந்தக் குழந்தைகள் "Father, Father" என்று அழைத்து மகிழும் பெரிய தந்தை யார்?

4. அன்னை திரேசா மன்னித்த செய்தி விளக்க படத் தயாரிப்பாளரின் பெயர் என்ன?

5. லூர்த்து என்கிற திருயாத்திரத் தலத்திலுள்ள மூன்று முக்கிய கவர்ச்சிகள் எவை?

6. எங்கள் சமூகங்களைப் பொறுத்தவரை சமூக மேம்பாட்டின் விலங்காக வேர் அறாது இருப்பது எது?

7. இறந்த ஒருவருக்காக ஒரே ஒரு தேவை பற்றி இறைவனிடம் கேட்கிறோம். அது எது?

8. புதிய ஏற்பாட்டில் எத்தனை பிரதிகளை புதிய வியட்நாம் கத்தோலிக்க திருச்சபை அச்சிட்டது?

9. உலக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான ஐ. நா. நிறுவனத்தின் திட்டம் கலாசார வழியிலான சர்வாதிகாரம் எனக் குற்றம் சாட்டிய கருதினால் எட்வேட் பிலாஸ்தின் எந்நாட்டினர்?

புள்ளித்திட்டம்

அ) 5 × 3 = 15
ஆ) 8 × 5 = 40
இ) 9 × 5 = 45

விடைகளை 30-12-94 இற்கு முன் அனுப்புங்கள்.

அன்புக்கண்மணிகாள்!

95இல் 'காவலன் கண்மணிகள்' எவ்விடயங்களைத் தாங்கி வரவேண்டும் என்பதை உங்கள் உணர்வுக்கேற்ப வரிசைப்படுத்தி எழுதுங்கள். என்றும் இறையேசுவின் ஆசிகள் கூறும்

அன்பின், அன்பு விழி.

# வாசகர் கருத்து

மாதமிருமுறை மலரும் எம் இனிய பாதுகாவலனிற்கு, நீ தாங்கிவரும் அத்தனை விஷயங்களும் அரிய பல பொக்கிஷங்கள் ஆகும்.

சென்ற இதழில் வெளிவந்த சொர்க்கத்தின் வாயிலிலே எனும் சிறுகதை எம் உள்ளத்தில்...பசுமரத்தாணி போல பதிந்துள்ளது, இக்கதை நகைச் சுவையாகவும், எம் வாழ்க்கைப் பாதையை மீளவும் திரும்பிப் பார்க்கவும் எம் வாழ்க்கையை சீர்படுத்தவும் உதவியாக உள்ளது. இப்படியான கதைகள் மேலும் தொடர்ந்து வர விரும்புகிறோம். "பரீட்சைக்கு படிப்பவர்களே"... எனும் தலைப்பில் வெளிவந்த தகவல் எம் போன்ற மாணவர்களுக்குப் பெரிதும் பயனுடையதாக உள்ளது.

மேலும் தொடர்ந்து வரும் ஆக்கங்களான, "நற்செய்தி படிப்போம்", "திருத்தலச் சுற்றுலா" "மரபுகளும் மாற்றங்களும்" நன்றாக உள்ளது. "திருத்தந்தையின் இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்" என்னும் வரலாற்று நிகழ்வை எழுதும் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கு எம் நன்றிகள். மேலும் இவ்வாறான வரலாற்று நிகழ்வை தொடர்ந்து எழுத வேண்டுகின்றோம்.

மேலும் இதழ் 20 குடும்ப இதழில், கணவன் மனைவிக்கு இடையிலான அன்புறவைப் பற்றி விளக்கமாக வெளிவந்தது மிகவும் வரவேற்கத்தக்கது.

"குருசு முத்தண்ணையின் கிசு கிசு" கருத்தாழமிக்கதாக உள்ளது. எம் வாழ் நாளில் நடக்கும் கலத்துரையாடலை சித்தரிப்பதாக அமைந்துள்ளது.

"காவலன் கண்மணிகள்" பகுதியும் நன்றாக அமைந்துள்ளது.மேலும் அப்பகுதியில் சிறப்பான விடயங்களைத் தர விரும்புகிறோம்.

மேலும் உன் பணிகள் தொடர்ந்து சிறந்து வர ஆவியானவர் வழி நடத்துவாராக வாழ்க காவலன்! வளர்க உன் பணி!

"காவலன் வாசகி"
செல்வி மேரி மஞ்சுரிக்கா
கரவெட்டி.

## 31-ம் நாள் நினைவு

திரு. அன்ரனி குரூஸ் சேவியர்
(இளைப்பாறிய இலங்கை மத்தியவங்கி உத்தியோகத்தர்)

"உயிர் உள்ளவரை
எம்மை நேசித்தீர்
மரணத்திலும் உம்மை
நாம் மறவோம்"

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15-12-1931 | 11-11-1994 |

ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி கொழும்பு கோட்டை புனித பிலிப்நேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மரியநாயகி (நவம்) மனைவி
யோலன்ட், பிரசாத் } பிள்ளைகள்
இல. 4, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். A/59/94

## மனச்சான்றின்...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

மனச்சான்று நிச்சயம் சுட்டிக் காட்டியிருக்க முடியாது. மாமிசத்தை உண்ணும் மனிதனின் மனம் உயிர்க்கொலை குறித்துக் குத்துவதில்லையே. இறைச்சிக்காய் உயிர்களைக் கொல்லும் மனிதன் 'கொன்றால் பாவம் தின்றால் போச்சு என மனக்குரலை அடக்குவதில்லையா? ஏழை, வறுமை அதனால் விபச்சாரம் செய்கிறேன் என்பதை நியாயப்படுத்த முயல்வதில்லையா? தவறு செய்வதால் வரும் மனவேதனையை அடக்க இவர்கள் தர்க்க ரீதி வாதங்களைத்தேடி ஓடுகின்றார்கள். இவ்வாறு நியாயப்படுத்த முனைபவர்களைக் கூட ஓரளவு புரிந்து கொள்ளலாம். ஆனால் தவறு செய்வதற்கென்றே புனிதர்களாய்த் தங்களை வெளிப்படுத்துகின்றார்களே அவர்களின் மனச்சான்று துர்நாற்றம் வீசும் சாக்கடையாய் மாறிவிட்டது.

நன்றி :
வத்திக்கான் வானொலி

நெஞ்சகலா நினைவில்

## முதலாம் வருடம்



திருமதி மதலேனம்மா
அந்தோனிப்பிள்ளை
(நெடுந்தீவு-9)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08-03-1917 | 12-12-1993 |

" அன்பு அம்மா,
நிறைந்த வாழ்வு வாழ்ந்தீர்,
பண்பு, பாசம், நேசம்,
நேர்மை யாவையும்
வளமூட்டி எம்மை வளர்த்தீர்,
வாழும் நாம் உயர் இடம்
அடைந்தோம்".

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக விண்ணுலக வாழ்வில் மாட்சி பெற அருள் ஆச்சிரமத்தில் 12-12-94 திங்கட்கிழமை காலை 6-00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக்கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர்
160/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம் A/60/94

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-6

ஆயர் இல்லத்தில் தான் ஆயர் வசிப்பது வழமை. முன்னர் தான் தங்கி இருந்த வாடைக்கட்டிடம் ஆயர் இல்லத்தை விட மக்களைச் சந்திக்கவும், மக்கள் வருவதற்கும் வசதியான இடம் என்று அந்த வாடகைக் கட்டிடத்திலேயே தங்கி விட்டார்.

ஒரு நாள் தருணம் பார்த்து ஆயர் இல்ல அதிகாரிகள் அவரது பொருட்கள் அனைத்தையும் வாடகைக் கட்டிடத்தில் இருந்து ஆயர் இல்லத்திற்கு இரகசியமாகக் கொண்டு சென்றனர்.

இனி ஒன்றும் செய்ய முடியாதென உணர்ந்த ஆயர் அவர்கள் தவறுதலாக விடடுச் சென்ற தனது செங்கோலைத் தனது தோளில் வைதது்ப் பிடித்துக் கொணடு தெருவீதி வழியாக நடந்து ஆயர் இல்லததை அடைநதார்.

இதைக்கண்ட மக்கள் எல்லோரும குருவாக மடடுமல்ல. ஆயராகவும இவர் விததயாசமான ஒருவரே என்று மகிழ்ந்தனர்.

ஆயராக இவர் செய்த பணிகள் அனைவராலும் போற்றப் பட்டன. தீராத நோயினால் தீண்டப்பட்டோர், நோயாளர் அனைவரிலும் மிகுநத அன்பும பரிவும காட்டினார். நோய் வாய்ப்பட்ட குரு ஒருவரினால் மட்டுமே இவர்களின் துன்ப துயரங்களை அறிய முடியும் என்று கூறி இவர்களை மேற்பார்வை செய்ய ஒரு நோய் வாய்ப்பட்ட குருவை நியமித்தார்.

குடும்பம் இறைவனால் நிறுவப்பட்டது. குடும்ப உறவுகள் அன்பினால் கட்டி எழுப்பப் பட வேண்டும். இயற்கைக்கு எதிரான கர்ப்பத்தடை, சிசுக் கொலை ஆகியவற்றைக் கடுமையாக எதிர்த்தார்.

குடும்ப ஆலோசனை நிலையங்களை நிறுவினார். கிறிஸ்தவ பக்தியை வளர்க்க விவிலிய வழிபாடு, செபமாலை, திருப்பவனி, திருயாத்திரைகள், மறை உரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பவற்றில் அதிக கவனம் செலுத்தினார்.

அரச பல்கலைக் கழகங்களின் இறையியல் துறை மூடப்பட்டபோது கடும் எதிர்பபுத் தெரிவித்தார். இறையியல் அரச பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து இருக்க வேண்டுமென வாதாடினார். முடியாது போகவே தனது மூன்று குருத்துவக் கல்லூரிகளை இணைத்து பல்கலைக் கழகத்தை தானே உருவாக்கி இறையியல் பட்டங்களை வழங்கினார். போலாந்து அரசு ஏற்க மறுத்த இந்த பல்களைக்கழகத்தையும், பட்டங்களையும் அகில உலகு உடனே ஏற்று அங்கீகரித்தது.

வெள்ளை அப்ப விருந்து என்ற பெயரில் வாரபதோறும் ஆயர் இல்லத்தில் கலந்துரையாடல் நடைபெறும். இக்கலந்துரையாடலில் அப்பமும். இரசமும் பரிமாறப்படும். பலர் இந்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்படுவதைப் பெருமையாக நினைத்தனர்.

ஆயராக வந்த பின்பும் தனது பல்கலைக்கழக விரிவுரைகளை அவர் விட்டுவிடவில்லை. லுப்ளின் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்தும் விரிவுரையாற்றினார்,

1963ஆம் ஆண்டு மார்கழி 30ஆம் திகதி கிராக்கோ மறைமாவட்ட பேராயராக நியமிக்கப்பட்டார். பேராயர் இல்லத்தில் பணி புரிந்த சகோதரி போகுமிலா பேராயரின் நேர அட்டவணையை பத்திரமாகக் குறித்து வைத்திருக்கிறார். அவரின் மிக நெருக்கமான நேர அட்டவணையை பார்க்கும் எல்லோரும் வியப்படைவர்.

(வளரும்)

## 31 ஆம் நாள் நினைவு



சந்தியாப்பிள்ளை சேவியர்
(முன்னாள் புதுமை மாதா ஆலய பராமரிப்பாளர்)

| பிறப்பு | இறைவனடி |
|---|---|
| 1923-07-04 | 1994-11-08 |

அவரோடு இறந்தோமானால்
அவரோடு வாழ்வோம்.
(அதி: 2-2 திமோ)

குடும்பத்தினர்
23 புதுமை மாதா கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
A/58/94

## கிளி - முருகா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு மாணவ மாணவிகள் தம்மைத் தாழ்த்தி களைப்பு, சலிப்பு இன்றி இனிமையுடன் உதவினார்கள். ஒரு வருடமும் இல்லாத மாதிரி இம்முறை சிறப்பாக நடைபெற்றது என்று அதிபரும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாராட்டு தெரிவித்தார்கள்

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கோட்டைக்கல்வி அதிகாரி திரு குருகுலராஜா அவர்கள் கலந்துகொண்டார்.

அருள் தந்தை அன்ரனி பாலா நிறைவேற்றிய திருப்பலியைத் தொடர்ந்து வரவேற்புரையை வித்தியாலய அதிபர் திரு. ம. பத்மநாதன் மிகவும் அழகாகவும் தெளிவாகவும் எடுத்தியம்பினார் அதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை, தீபநடனம், தனி நடனம், புஸ்ப அஞ்சலி, குழு நடனங்கள், அருள் தந்தை நேசராஜா அடிகளாரின் ஆசியுரை, நாடகங்கள், நன்றியுரை என்பன இடம்பெற்றது. சிறப்பு நிகழ்ச்சியாக நத்தார் பப்பாவின் அபினய நடை என்பன இடம் பெற்றது. சிற்றுண்டி வைபவத்துடன் ஒளிவிழா இனிதே நிறைவேறியது.

தகவல்: செல்வி அ. ஞானமலர் பரந்தன்.

# டட்லி பெரேரா O.M.I. அடிகளுடன் சில நிமிடங்கள்



*அம்பிட்டிய தேசிய குருமடத்தின் விரிவுரையாளரான அருள் திரு டட்லி பெரேரா o. m. i. அடிகளார் குருக்களுக்கான தியானத்தை நெறிப்படுத்துவதற்காக யாழ் நகர் வந்தபொழுது அளித்த சிறப்புப் பேட்டி.*

பேட்டி கண்டவர்:
● அருள்திரு C.G. ஜெயக்குமார்
தமிழாக்கம்: —ஜெபா—

● **இதற்கு முன்னதாக நீங்கள் யாழ்நகர் வந்திருக்கின்றீர்களா?**

நான் யாழ்நகர் வருவது இது ஐந்தாவது தடவை. ஆனால் கடைசியாக நான் யாழ்நகர் வந்து 15 வருடங்களாகிவிட்டன.

● **இந்தத் தடவை நீங்கள் இங்கு வந்து இறங்கியவுடன் உங்கள் மனதில் ஏற்பட்ட உணர்வுகளைப் பற்றி கூற முடியுமா?**

இதற்கு முன்னர் நான் இங்கு வந்தபொழுது மிகவும் மகிழ்ச்சியான பயணங்களைத்தான் அனுபவித்தேன். ஆனால் இம்முறை முற்றிலும் முரண்பாடான ஒரு பயணத்தினூடாக இங்கு வந்து சேரக்கூடியதாக இருந்தது. நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான பயணக் கஷ்டங்களை அனுபவித்தேன் தமிழர்கள் அனைவரும் இக்கஷ்டங்களை அனுபவித்ததைப் பார்த்தபோது தமிழ் மக்களின் கஷ்டங்களை பார்க்க முடிந்தது என்பது மட்டுமல்லாமல் அவர்களுடைய துன்பங்களை நானும் அனுபவிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்பதையிட்டு ஒரு குரு என்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்,

● **வடக்கு கிழக்கு நிலைமை பற்றி நீங்கள் கொழும்பிலே கேள்விப்பட்டதற்கும் நேரிலே பார்ப்பதற்கும் இடையே ஏதாவது வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்கிறீர்களா?**

நிச்சயமாக பாரிய வேறுபாடுகள் இருப்பதைத்தான் நான் அவதானிக்கிறேன். முக்கியமாக யாழ் நகருக்கும் அதைச் சுற்றியுள்ள இடங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற பாரிய அழிவைப் பற்றி நான் கொழும்பில் சற்றுமே கேள்விப்படவில்லை. அழிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டு உருக்குலைந்து போயுள்ள கட்டிடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், மக்களின் வீடுகள்... இவையெல்லாம் நம்பமுடியாத காட்சிகளாகவேயுள்ளன. தென்பகுதி சமூகத் தொடர்புச் சாதனங்கள் எதுவும் இவ்வழிவுகளைப்பற்றி வெளிப்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் என்று சிலவற்றை தொலைக் காட்சி ஒளிபரப்பியதைத்தான் பார்த்திருக்கின்றேன். இங்கு வந்து இந்த அழிவுகளைப் பார்த்த பின்னர் தான் இங்கு நடைபெறுகின்ற போர் எவ்வளவு கொடூரமானது என்பதை என்னால் உணரக்கூடியதாகவுள்ளது.

● **வடபகுதி வாழ் மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையைப்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இங்கு வாழுகின்ற மக்களின் வாழ்க்கை நிலை, போக்குவரத்து வசதியின்மை, மின்சாரமின்மை, தொடர்பு சாதனங்களின்மை, மருத்துவ வசதியின்மை போன்ற காரணிகளால் 100 வருடங்களுக்கப்பால் பின் தள்ளப்பட்ட ஒரு நிலையையே நான் காணுகின்றேன்.

இந்த பின்னடைவான வாழ்க்கை முறையை மக்கள் தவிர்க்க முடியாததொன்றாக ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது தங்கள் விடுதலை வாழ்வை மனதிற்கொண்டு திருப்தியோடு ஏற்றுக்கொண்டு வாழ்கிறார்களா என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது.

● **தற்போது மேற்கொள்ளப்படுகின்ற சமாதான முயற்சிகள் பற்றி தங்கள் கருத்து என்ன?**

நான் ஒரு அரசியல்வாதி அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்ற எந்த ஒரு சாராரும் தம்மை ஒரு பலமான நிலையில் வைத்துக்கொண்டு இம்முயற்சிகளில் ஈடுபடவே முன்வருவார்கள். எந்த சாராரும் தமது பலவீனத்தின் நிமித்தம் பேச்சுவார்த்தைக்கு முன்வரமாட்டார்கள். இவ்வகையில் எமது அரசும் விடுதலைப்புலிகளும் தம்மை ஒரு பலமான, ஸ்திரமான நிலையில் வைத்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. சிறப்பாக விடுதலைப்புலிகள் தாங்கள் எவராலும் வெற்றிகொள்ளப்படாத பலமான நிலையில் உள்ளார்கள் என்பதை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். சமாதான பேச்சுவார்த்தைக்கும், அமைதித்தீர்வுக்கும் இந்த நிலை மிகவும் சாத்தியமானதெனவே நான் கருதுகின்றேன்.

இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் வகையிலான சில எண்ண அலைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உள்ளத்தில் இருப்பதுபோல் தெரிகின்றது. L. T. T. E தலைவர் பிரபாகரன் அவர்களுடைய உள்ளத்திலும் சமாதானத் தீர்வுக்கான எண்ண அலைகள் குடிகொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இந்த எண்ண அலைகள் ஒருமைப்பாட்டை அடையும் பட்சத்தில் சமாதானம் பிறக்க வாய்ப்புண்டு. இது எமது சாதாரண சிந்தனைகளுக்கும் அரசியல் கட்டுக்கோப்புகளுக்கும் அப்பால்பட்ட ஒன்றாகவே எனக்கு தெரிகிறது.

● **இம்முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?**

எந்த ஒரு துன்பமும் பிரசவ வேதனை போன்றது என்பது எமது விவிலியத்தின் விசுவாச அனுபவம். ஒரு புதுப்படைப்பு உருவாக இந்த துன்பங்கள் காரணமாக அமையும். எமது மக்களுடைய நீண்டகால துன்ப வரலாற்றைப் பார்க்கும் போதும், அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகியவை சமாதானத்தின் மீது காட்டும் ஆர்வத்தை அவதானிக்கும் போதும் இதய சுத்தியுள்ள நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் எமது மக்களும் சுதந்தரமாக வாழும் காலம் நெருங்கி வருகிறது என்றுதான் எண்ணத்தோன்றுகிறது.

● **தாங்கள் மீண்டும் கொழும்பு செல்லும்போது தென்பகுதி மக்களுக்கு நீங்கள் எடுத்துச் செல்லும் அனுபவங்கள் என்ன என்பதை கூறுவீர்களா?**

இந்தக் கேள்விக்கு நான் இதயசுத்தியோடு பதில் சொல்வதென்றால் முதலில் ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும். நான் வடபகுதிக்கு வருவதையே தெற்கிலுள்ள எமது உறவினர்கள், நண்பர்கள், சககுருக்கள் பலர் விரும்பவில்லை. அதேவேளை இங்கு நான் பெற்ற அனுபவங்களை நான் சென்று அவர்களுக்கு சொன்னால் அவர்கள் நான் மாறிவிட்டேன் என்று என்னை ஏளனமாக உற்று நோக்குவார்கள் என்றுதான் எதிர்பார்க்கிறேன். நான் இங்கு கண்டவை, அனுபவித்தவற்றையெல்லாம் அவர்களை ஏற்றுக்கொள்ள வைப்பது மிகவும் கடினமானதொன்று என்பதை நான் அறிவேன். இருப்பினும் நான் தென்பகுதி மக்களுக்கு வடபகுதி மக்களின் நிலையை எடுத்துச் சொல்ல எனக்குக் கிடைக்கின்ற எல்லா சந்தர்ப்பங்களையும் நன்கு பயன்படுத்தி தமிழ் மக்களின் உண்மை நிலையை எடுத்துரைக்க என்னால் இயன்றவரை முயற்சிப்பேன். அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இவை பற்றி எடுத்துச் சொல்வேன். எல்லாவற்றிற்கும் மேலாக தென்பகுதி கிறிஸ்தவ மக்களனைவரையும வடக்கு கிழக்கு மக்களின் அமைதி வாழ்வுக்காக பிரார்த்திக்கும் படி தூண்டுவேன். நானும் இதற்காக விஷேடமாக பிரார்த்திக்கிறேன்.

# ஆயர்கள் பௌத்த மதத் தலைவர்களுடன் சந்திப்பு

தமிழீழ மறைமாவட்டத்தின் மூன்று கத். ஆயர்களுக்கும் இலங்கையின் தென்பகுதி பௌத்தமதத் தலைவர்களுக்குமிடையே ஒரு சிநேகபூர்வமான உரையாடல் கடந்த 2-12-94 வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

சமாதான முயற்சிகளைமேற்கொள்ள முட்டுக்கட்டைகளாக இருக்கும் காரணிகள் பற்றியும் தப்பபிப்பிராயங்கள் பற்றியும் இச்சந்திப்பில் சிறப்பாக கலந்துரையாடப்பட்டது.

ஆயர்கள் தென்பகுதி மக்களைச் சந்தித்து உரையாட வேண்டியதன் அவசியத்தை தென்பகுதி மதத்தலைவர்கள் வலியுறுத்தியதுடன் தாங்களும் தமிழர் வாழ் பகுதிகளுக்குச் சென்று அவர்களைச் சந்திக்க விரும்புவதாகவும் எடுத்துரைத்தார்கள்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட 5 பௌத்த மதத் தலைவர்களுள் வண. சொபித்த தேரு, வண. சுமங்கள விமல சூரியதேரு ஆகியோரும் அடங்குவர்

## திருத்தி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக முன்னாள் பாராளுமன்ற வளாகமான ஜனாதிபதி செயலகத்தின் முன் அழைத்துச்செல்லப்பட்டு இராணுவ மரியாதையுடன் சிறிலங்கா ஜனாதிபதி அவர்களால் வரவேற்கப்படுவார். பிரதான அரசியல் பிரமுகர்களை அறிமுகம் செய்தபின் கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலய முன்றலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு கொழும்பு மாநகர முதல்வர் அவருக்கு நகரத்தின் திறவுகோலைக் கையளிப்பார். பின்னர் பேராலயத்தில் குருக்கள், துறவியர் ஆகியோருக்கு விசேட உரையாற்றி வேதாகம வழிபாட்டில் பங்கு பற்றுவார்.

மறுநாள் 21-01-95 சனி காலை 8 00மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச நினைவு மண்டபத்தில் (B.M.I.C.H) பிறசமயத் தலைவர்களுடன் உரையாடுவார். அதன் பின்னர் காலை 9.15க்கு காலிமுகத்திடலைச் சென்றடைந்து திறந்த மோட்டாரில் மக்களுடாக 30 நிமிடங்கள் பவனி வருவார். 9.45 மணிக்கு ஆரம்பமாகும் கூட்டுத்திருப்பலியில் ஆசா. யோசேவ் வாஸ் அடிகளுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்கும் வைபவம் இடம்பெறும். பின்னர் இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களுடனான சந்திப்பும், மதிய போசனமும் பேராயர் இல்லத்தில் இடம்பெறும்.

---

நம் மண்ணில் பணிபுரிந்த குருக்கள்

## இறைபதம் அடைந்த தினம்

நன்றியுடன்

## "செபிப்போமாக"

டிசம்பர்

| | | |
|---|---|---|
| 18 | பூறி C. o m i. | 1947 |
| 20 | சிங்கராயர் L A. o m i. | 1986 |
| 22 | லனோடி A. o.m.i. | 1933 |
| 22 | பென்டென்கைம் அல்போன் o.m.i. | 1944 |
| 22 | அன்ரொனைனஸ் P. A. J. P. o m.i- | 1973 |
| 24 | ஓம்லோ C. M. o m i. | 1992 |
| 26 | புறோகான் L. o m.i. | 1977 |
| 26 | சூசைப்பிள்ளை B * | 1983 |
| 28 | கூர்டோன் B. o.m.i. | 1897 |
| 28 | மான்கோ R. o.m.i. | 1930 |
| 28 | போ C. o.m.i. | 1931 |
| 29 | பிரான்சிஸ் P. M. o.m.i | 1946 |
| 30 | துக்ரின் V o.m.i | 1969 |
| 31 | மரியாம்பிள்ளை C. o.m.i. | 1985 |

* யாழ் மறை மாவட்ட குருக்கள்

---

## ஆராதனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன. திருத்தந்தையின் உருவம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள், கைக்கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள் என்பன தற்பொழுது கொழும்பில் அமோகமாக விற்பனையாகின்றன. திருத்தந்தையின் உருவம் பொறிக்க பட்ட கைக்கடிகாரம் 500/-விலிருந்து விற்பனையாகிறது.

## குருத்துவ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லான காலப்பகுதியில் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக்கல்லூரியில் மெய்யியல், இறையியல் படிப்பை மேற்கொண்டார். இவர் 1994ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

நீர்வேலி மண் பெற்றெடுத்த முதற்குருமணியான இவர் தமது முதற் திருப்பலியை 17-12-94 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி புனித பரலோக அன்னை ஆலயத்தில் நிறைவேற்றவுள்ளார்,

## தமிழ்ச் சகோ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஞானொடுக்கத்தை அவர் சிறப்புற நெறிப்படுத்தினார்.

கடந்த நவம்பர் 27 முதல் டிசம்பர் 2 வரை நடைபெற்ற இந்த ஞானொடுக்கத்தில் குருமுதல்வர் உட்பட யாழ். மறைமாவட்டத்திலிருந்து 24 குருக்கள் பங்கு பற்றிப் பயனடைந்தார்கள்.

அருள் தந்தை டட்லி பெரேரா இதற்கு முந்திய வாரம் அமலமரித்தியாகிகள் சபைக் குருக்களுக்கான ஞானொடுக்கத்தையும் அருள் திரு F. டானியல் o.m.i. நவம்பர் முதல் வாரத்தில் ஒருபகுதி மறைமாவட்ட குருக்களுக்கான ஞானஒடுக்கத்தையும் நெறிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. — ஜெபா —

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில்1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.